## 29.5 ஊராட்சி பகுதி நேர எழுத்தராக பணியமர்த்தப்படுவதற்கு உச்ச வயது வரம்பு நிர்ணயித்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண் 245 நாள் : 4.8.1997

படிக்க :

ஊரக வளர்ச்சி துறையின் 230 எண்ணும் 15.10.96 நாளும் இட்ட நிலை அரசாணை.

**ஆணை**

கிராம ஊராட்சிகளில் பகுதிநேர எழுத்தராக நியமிக்கப்படுபவர்கள் பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேறியவர்களாகவும் 28 / வயதைக் கடக்காதவர்களாகவும் அந்தந்த ஊராட்சியில் குடியிருப்பவராகவும் இருக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சித் துறையின் 230 எண்ணும் 15.10.96 நாளும் இட்ட நிலை அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. ஊராட்சி பகுதிநேர எழுத்தர் பணியிடம் அரசுப் பணியிடம் அல்ல என்பதால், அரசுப்பணிக்குரிய வயது வரம்பு இப்பணியிடத்திற்குப் பொருந்தாது. இருப்பினும் உச்ச வயது வரம்பை, பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு உயர்த்தி நிர்ணயிப்பது குறித்து அரசு ஆய்வு செய்தது.

3. கிராம ஊராட்சிப் பகுதிநேர எழுத்தர் பதவிக்கு உச்ச வயது வரம்பு 28 என்பதை, பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு 5 (ஐந்து) ஆண்டுகள் உயர்த்தி, அதாவது 33 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என நிர்ணயித்து தற்பொழுது அரசு ஆணையிடுகின்றது,

4. பிற வகுப்பினருக்கு, உச்ச வயது வரம்பு 28 என்பதில் மாற்றம் ஏதும் இல்லை,

5. மாவட்ட ஆட்சியர்கள்,இந்த ஆணையின்நகலை அனைத்து கிராம ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்